## நிலையான வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையில் ஒதுக்கீடு செய்ய வேண்டும்!

# மாநிலங்களுக்கான வரிப்பகிர்வை 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டும்!

## “தி இந்து” ஆங்கில நாளேட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!



**சென்னை, டிச. 7 -**

**‘16 வது நிதிக்குழு முன் மாநிலங்களும், அவை எதிர்கொள்ளும் சவால்களும்’ என்ற தலைப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “தி இந்து” நாளேட்டில் (06,12,2024) நடுப்பக்க கட்டுரை எழுதியுள்ளார்.**

அதன் தமிழாக்கம் வருமாறு:

அண்மையில், பொருளாதார வல்லுநர் திரு. அரவிந்த் பனகாரியா தலைமையிலான 16வது நிதிக்குழுவின் கூட்டம் தமிழ்நாட்டில் நடைபெற்றது. பல்வேறு துறைசார் நிபுணர்களைக் கொண்ட இந்த குழு இந்தியா எதிர்கொண்டு வரும் பொருளாதாரச் சிக்கல்கள், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கிடையேயான உறவுகளில் உள்ள சமச்சீரற்ற தன்மை ஆகியவற்றைச் சரிசெய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

**உலகளாவிய மாற்றங்களால் உருவாகியுள்ள புதிய வாய்ப்புகள்**

இந்த நிதிக்குழு எடுக்க உள்ள முடிவுகள், நாட்டின் அடுத்த ஐந்தாண்டுகளுக்கான நிதிச் செயல்பாடுகளுக்கு வடிவம் கொடுப்பது மட்டுமின்றி, எதிர்வரும் காலங்களில் இந்தியா தேர்வு செய்யப்போகும் பொருளாதாரப் பாதையின் மீதும் தாக்கம்செலுத்தக்கூடியவையாகும்.

உலக அளவில் பல முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்து வரும் இவ்வேளையில், 16வது நிதிக்குழு தனது பணியை மேற்கொண்டுள்ளது. தற்போது வளர்ந்து வரும் புதிய முறைகளான, நட்புறவு நாடுகளுக்கு வணிகச் செயல்பாடுகளை மாற்றுதல் மற்றும் உற்பத்தி மற்றும் முதலீடுகளை மீண்டும் சொந்த நாட்டில் தொடங்குதல் உள்ளிட்டவை சர்வதேச வணிகம் மற்றும் முதலீட்டு நடைமுறைகளை மறுகட்டமைப்பு செய்கின்றன. இந்த மாற்றங்கள் இந்தியா மற்றும் தமிழ்நாட்டிற்குத் தனித்துவமான வாய்ப்புகளையும் வழங்குகின்றன.

இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனில், மாநிலங்களுக்குச் சமமான மறுபங்கீடு மற்றும் தமிழ்நாடு போன்ற சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களில் வளர்ச்சியை ஊக்குவித்தல் உள்ளிட்ட சவால்கள் இந்த நிதிக்குழுவின் முன்னுள்ளது.

1951ஆம் ஆண்டு, முதல்நிதிக்குழு அமைக்கப்பட்டதிலிருந்து, தொடர்ந்து வந்த ஒவ்வொரு நிதிக்குழுவும், அந்தந்தக் காலத்தின் நிதிச் சிக்கல்களுக்கு ஏற்ப தங்களது அணுகுமுறையை மாற்றியமைத்துக்கொண்டன. ஒவ்வொரு நிதிக்குழுவும் செங்குத்துப் பகிர்வின் வழியாக மாநிலங்களுக்கான பகிர்வை அதிகரிப்பதன் மூலம் சமமான வளப்பங்கீட்டை அடையவும், கிடைமட்ட பகிர்வின் வழியாகக் குறைந்த வளர்ச்சி பெற்ற மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கவும் முயற்சி செய்துள்ளன.

ஆனால், அவர்களின் நோக்கங்களுக்கும், அரசின் செயல்பாடுகளுக்கும் இடையே பெரும் இடைவெளி இருந்தது; எனவேதான், நிதிப்பகிர்வு முறையில் புதிய மற்றும்



THE HINDU

States and the challenge before the Finance Commission

M.K. Stalin

There needs to be a progressive resource allocation methodology for performing States such as Tamil Nadu

நியாயமான அணுகுமுறையை நாங்கள் முன்வைக்கிறோம். உதாரணமாக, 15வது நிதிக்குழு மாநிலங்களுக்கு 41% வரிப்பகிர்வு அளிக்க வேண்டும் என்று பரிந்துரைத்த நிலையிலும், முதல் நான்காண்டுகளுக்கு ஒன்றிய அரசின் அரசின் வரிவருவாயில் இருந்து 33.16 சதவீதம் மட்டுமே மாநிலங்களுக்குப் பகிர்ந்து வழங்கப்பட்டது. எதிர்பாராத விதமாக வரி மற்றும் கூடுதல் கட்டணங்களை ஒன்றிய அரசு உயர்த்தியதே பகிர்வில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சிக்குக் காரணமாகும்.

**மாநிலங்களுக்கான பகிர்வை 50 சதவீதமாக உயர்த்துதல் மற்றும் வளர்ச்சியை ஊக்குவித்தல்**

மாநிலங்கள் மக்களுக்கான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் அதேவேளையில், அவற்றிற்கான ஒன்றிய நிதியும் அதற்கேற்றவாறு உயர்த்தப்பட வேண்டும். ஒன்றிய திட்டங்களுக்குச் செலவாகும் கூடுதல் நிதி மற்றும் ஒன்றிய அரசின் குறைந்த நிதிப்பகிர்வு ஆகிய இரண்டு காரணங்களும் மாநிலங்கள் மீதான நிதிச்சுமைக்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன.

எனவேதான், ஒன்றிய வரிவருவாயில் இருந்து மாநிலங்களுக்கு 50 சதவீத வரிப்பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கிறோம். இது மாநிலங்கள் நிதி சுயாட்சியுடன் செயல்படவும், மாநில மக்களுக்குத் தேவையான திட்டங்களை அறிமுகப்படுத்தவும் உதவும்.

கடந்த 45 ஆண்டுகளாக, கிடைமட்ட வரிப்பகிர்வு முறையின் மூலமாகப் பின்பற்றுபட்டுவந்த மறுபங்கீட்டு கொள்கையானது, வளர்ச்சிக்குப் பெரியளவில் உதவவில்லை என்பது தெளிவாகிறது. எனவே இங்கு எழும் அடிப்படைக் கேள்வி என்னவென்றால், குறைந்த அளவிலான தேசிய பொருளாதார வளங்களுடன், வளர்ச்சியில் பின்தங்கிய மாநிலங்களுக்குப் பெரிய பங்கை வழங்குவதில், கவனம் செலுத்தப் போகிறோமா? அல்லது பெரிய அளவிலான தேசிய பொருளாதார வளங்களுடன், அனைவருக்கும் அதிகமான வளங்களைப் பகிர்ந்தளிக்கும் சமமான பங்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதில் கவனம் செலுத்தப் போகிறோமா? இதற்கான விடை சிக்கலானது;

இருப்பினும் இதில் சமச்சீரான அணுகுமுறையே பெரிய அளவிலான தேசிய பொருளாதார வளங்களுடன், வளர்ச்சியில் பின்தங்கிய மாநிலங்களுக்குத் தேவையான பகிர்வை அளிக்கவும், முன்னேற்றப் பாதையில் இருக்கும் மாநிலங்களின் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கத் தேவையான வளங்களைப் பகிர்ந்தளிக்கவும் உதவும். தங்களது முழுத்திறனையும் பயன்படுத்தி, இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் உந்துசக்தியாக இருக்க, வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்கு இதுபோன்ற வரிப்பகிர்வு முறையே அவசியம்.

**வளர்ச்சியடைந்த மாநிலங்களின் தனித்துவமான சவால்கள்**

இதற்கிடையில், தமிழ்நாடு போன்ற வளர்ச்சியடைந்த மாநிலங்கள் மக்கள்தொகை மற்றும் நகரமயமாதல் போன்ற தனித்துவமான சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. தேசிய சராசரியை விட வயதானோர் எண்ணிக்கை அதிகரிப்பு, வயதான மக்களுக்கான ஆதரவு திட்டங் களுக்கு ஆகும் செலவினங்கள் அதிகரிக்கும் நிலையில், நுகர்வு அடிப்படையிலான வரி வருவாய் தொடர்ந்து குறைந்து வருகிறது. இதுபோன்ற மாநிலங்கள் வளர்ச்சியில் தேக்கமடையும், ‘நடுத்தர வருமான மாநிலம்’ எனும் பொறிக்குள் சிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம்.

அதேபோல், வேகமாக வளர்ந்து வரும் மாநிலங்களில் நகரமயமாதல் உடனடியாக எதிர்கொள்ள வேண்டிய சவால்களில் ஒன்றாகும். தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் நாட்டிலேயே வேகமாக நகரமயமாதல் அதிகரிக்கும் சவாலை எதிர்கொண்டுள்ளன. இதன் காரணமாக 2031ஆம் ஆண்டு அதன் நகர்ப்புற மக்கள்தொகை 57.30 சதவீதம் என்ற நிலையில் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது அப்போதைய தேசிய சராசரியான 37.90 சதவீதத்தை விட அதிகமாக இருக்கும்.

எனவே, நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் எதிர்கால நகரமயமாதலுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளுக்குத் தேவைப்படும் வளங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

அதேசமயம் நிதிக்குழுவின் பரிந்துரைகள் பொருளாதாரக் கணக்குகளுக்கு அப்பாற்பட்டது என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அனைத்து மாநிலங்களும் சமமாகப் பங்களித்து, அதிலிருந்து பலனடைவதற்கும் உகந்த எதிர்காலத்தைத் தீர்மானிப்பதும் கூட. அது உற்பத்தியை ஊக்குவிப்பது, நகரமயமாதல் சவால்களை எதிர்கொள்வது அல்லது காலநிலை மாற்றத்தைக் கையாள்வது என எதுவாக இருப்பினும், நிதிக்குழுவின் நிதிக்குழுவின் பரிந்துரை கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு, உலகின் முன்னணி பொருளாதார நாடுகள் வரிசையில் இந்தியாவை நிலை நிறுத்தத் தேவையான பாதையையும் தீர்மானிக்கிறது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், 6.12.2024 நாளிட்ட ‘தி இந்து’ ஆங்கில நாளிதழில் எழுதியுள்ளார்.

---

## ரூ.19.21 கோடியில் 13 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் - ரூ.9.15 கோடியில் 28 திட்டப் பணிகள் திறப்பு!

# இராணிப்பேட்டை மாவட்டத்தில் 7,165 பயனாளிகளுக்கு ரூ.37.79 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**இராணிப்பேட்டை, டிச. 7 -**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2024) இராணிப்பேட்டை மாவட்டத்தில் முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற விழாவில் பொதுப்பணித் துறை சார்பில் ரூபாய் 19.21 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 13 அரசு பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி, பொதுப்பணித் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 9.15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 28 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 288 ஊராட்சிகளுக்கு, தலா 33 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 364 கலைஞர் விளையாட்டு உபகரண தொகுப்புகளை வழங்கி, பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 7,165 பயனாளிகளுக்கு 37.79 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று நடைபெற்ற விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் 700 பயனாளிகளுக்கு 8.12 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூபாய் 18.36 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்லம், பழங்குடியினர் இல்லம் கட்டுவதற்கான ஆணைகளையும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 2,229 மகளிருக்கு, ரூபாய் 17.98 கோடிக்கான வங்கி கடனுதவி காசோலைகளையும், உணவுப் பொருள் மற்றும் வழங்கல் துறை சார்பில் 178 பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகளையும் வழங்கினார்.

மேலும் கூட்டுறவுத் துறை சார்பில் 716 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 7.43 கோடி ரூபாய்க்கான கடனுதவி காசோலைகளையும், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில் மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 70 பயனாளிகளுக்கு 1.09 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் துறை சார்பில் 6 பயனாளிகளுக்கு ரூபாய் 3.57 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 1 பயனாளிக்கு 2.23 இலட்சம் ரூபாய் மானியத்தில் பவர் டில்லரையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 50 பயனாளிகளுக்கு மொத்தம் 50 இலட்சம் ரூபாய் மதிப்பிலான செயற்கை கால்கள், இருசக்கர வாகனம் மற்றும் வீல் சேர் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், தமிழ்நாடு தொழில் வணிகத் துறை, மாவட்ட தொழில் மையம் அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 36 பயனாளிகளுக்கு தொழில் தொடங்க 77.76 இலட்சம் ரூபாய் மானிய உதவிகளையும், தாட்கோ சார்பில் நன்னிலம் மகளிர் நில உடமைத் திட்டம் மற்றும் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் சமூக பொருளாதார தொழில் முனைவு திட்டத்தின் கீழ் 22 பயனாளிகளுக்கு 48.08 இலட்சம் ரூபாய்க்கான மானிய உதவிகளையும் வழங்கினார்.

தொடர்ந்து முன்னோடி வங்கி சார்பில் 8 பயனாளிகளுக்கு கறவை மாடு வாங்க 8 இலட்சம் ரூபாய்க்கான கடனுதவிகளையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூபாய் 33 ஆயிரம் மதிப்பிலான தையல் இயந்திரங்களையும், பிற்படு த்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் 33 பயனாளிகளுக்கு ரூபாய் 2.65 இலட்சத்திற்கான மானிய உதவிகளையும், நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் 227 தூய்மை காவலர்களுக்கு ரூபாய் 6.81 இலட்சம் மதிப்பிலான பாதுகாப்பு உபகரணங்களையும் என மொத்தம் 7,165 பயனாளிகளுக்கு, ரூபாய் 37.79 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.எஸ். ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல். ஈஸ்வரப்பன், ஏ.எம். முனிரத்தினம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.ஜெ. மேகநாத ரெட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு. சந்திரகலா, மாவட்ட வருவாய் அலுவலர் ந.சுரேஷ், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பா.ஜெயசுதா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2024) இராணிப்பேட்டை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற விழாவில் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர ஸ்கூட்டர், சக்கர நாற்காலி, செயற்கை கால் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.எஸ். ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ஏ.எம். முனிரத்தினம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். ஜெ.யு. சந்திரகலா, மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2024 இராணிப்பேட்டை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற விழாவில் 288 ஊராட்சிகளுக்கு தலா 33 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 364 கலைஞர் விளையாட்டு உபகரண தொகுப்புகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.எஸ். ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல். ஈஸ்வரப்பன், ஏ.எம். முனிரத்தினம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். ஜெ.யு. சந்திரகலா, மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.